FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364141

1. District : Salem PS: VAC Year: 2026 FIR No.: 02/AC/2026 Date: 12.03.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 10.03.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : at about 16.00 Hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 11.03.2026 Time : 18.15 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 12.03.2026 Time : 07.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 55 kms. West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Office of VAO, Navapatti Group Village, Metrur Taluk, Salem District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Elango (b) Father's/ Husband's Name : Subramaniam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Business (g) Address : D.No 2/1-64, Moolakkadai Street, Chowk, Kunjandiyur, Metrur Taluk, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Bakthiyaraj, VAO, Navapatti Group Village, Metrur Taluk, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

12/03/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

N. Narendran 13.03.2026

15. Date & Time of despatch to the court: 12.03.2026 at 07.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Narendran
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police.
VAC, Salem

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 2/AC/2026 சட்டப்பிரிவு 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது:

11.03.2026ம் தேதி புதன்கிழமை மாலை 18.15 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.இளங்கோ த/பெ சுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், S.இளங்கோ த/பெ சுப்பிரமணியம், 2/1-64, மூலக்கடை தெரு, கோனூர், குஞ்சாண்டியூர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, சேலம். ஐயா, நான் சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் குஞ்சாண்டியூரில் குடியிருந்து வருகிறேன். நான், குஞ்சாண்டியூரில் KS & Co என்ற பெயரில் சொந்தமாக பெட்ரோல் பங்க வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய அப்பா பெயர் K.சுப்ரமணியம், அவர் கடந்த 11.09.2025 ந் தேதி மேட்டூர் வட்டம், சாம்பள்ளி கிராமம் புதிய சர்வே எண் 793பி/1ஏ ல் 4.54 ஏக்கர் நிலமும், சர்வே எண் 793பி/1பி1 ல் 0.74 ஏக்கர் நிலமும் சேர்த்து, மொத்தம் 5.28 ஏக்கர் நிலத்தை மேட்டூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 4095/2025 ன்படி கிரையம் பெற்றுகொண்டார். அதன் பின்னர் எனது அப்பா கிரையம் பெற்ற மேற்படி நிலத்தில், மேட்டூர் வட்டம், சாம்பள்ளி கிராமம் புதிய சர்வே எண் 793பி/1ஏ ல் 3.54 ஏக்கர் நிலத்தை மட்டும் மேட்டூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 4569/2025 ன்படி 15.10.2025 ந் தேதியன்று எனது பெயரில் தான செட்டில்மெண்டு செய்துகொடுத்தார். ஆனால் எங்கள் பெயரில் பட்டா மாறாமல் இருந்துவந்தது. அதனால், நான் பட்டா மாறுதல் சம்பந்தமாக 09.03.2026 ந் தேதியன்று காலை சுமார் 11.30 மணிக்கு மேட்டூர் வட்டம், நவப்பட்டி குரூப், கிராம நிர்வாக அலுவலகம் சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ. பாக்கியராஜ் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர், பட்டா மாறுதல் மனு செய்தபிறகு என்னை வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதனால் 09.03.2026 ந் தேதியன்றே எனது பெயரிலும், எனது அப்பா பெயரிலும் தனிதனியாக பட்டா மாறுதல் கேட்டு ஆன்லைனில் மனு செய்தேன். அதன்பின்னர் மாறுநாள் 10.03.2026 ந் தேதியன்று காலை சுமார் 11.30 மணிக்கு, நான், நவப்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ. பாக்கியராஜ் அவர்களை சந்தித்து, பட்டா மாறுதல் மனு செய்த விவரத்தை

தெரிவித்தேன். அப்போது அவர் என்னிடம் மனு சம்பந்தமான கிரைய ஆவணங்களை பெற்றுக்கொண்டு அந்த ஆவணத்தில் இருந்த எனது போன் நெம்பரை பார்த்து விவரம் கேட்டு தெரிந்துக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார். பின்னர் 10.03.2026 ந் தேதியன்றே மதியம் சுமார் 1.30 மணிக்கு எனக்கு போன் செய்து என்னிடம் பட்டா மாறுதல் மனு சம்பந்தமாக, நிலம் கிரையம் பெற்ற விவரங்களை பற்றி கேட்டு தெரிந்துக்கொண்டு, முதலில் கூட்டுபட்டாவில் உங்கள் பெயரையும், உங்க அப்பா பெயரையும் சேர்த்துவிட்டு, பின்னர் தனி பட்டா வாங்கிகொள்ளலாம் என்று சொல்லி, என்னை வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு வந்து நேரில் பார்க்கச்சொன்னார். அதன்படி, நான் 10.03.2026 ந் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு நவப்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ. பாக்கியராஜ் அவர்களை சந்தித்தேன். அப்போது, அவர் நிலம் அமைந்துள்ள இடம் பற்றிய விவரம் என்னிடம் கேட்டு தெரிந்துக்கொண்டார். பின்னர் உங்கள் பெயரிலும், உங்க அப்பா K.சுப்ரமணியம் பெயரிலும் பட்டா மாறுதல் செய்யவேண்டும் என்றால், ரூபாய் 14,000/-ம் எனக்கு தனியாக கொடுத்துவிடுங்கள் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று தெரிவித்தேன். அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்துவிட்டு என்னை எப்போது வேண்டுமானாலும் பார்த்து நான் கேட்ட பணத்தை கொடுத்துவிடுங்கள் வேலையை உடனே முடித்துவிடலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டார். நவப்பட்டி VAO பாக்கியராஜ் அவர்களுக்கு ரூபாய் 14,000/- லஞ்சமாக கொடுத்து என்னுடைய பட்டா மாறுதல் வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அவர்கள் சொன்னதுபோல, ரூபாய் 14,000/-த்துடன் சென்று அவர்களை சந்திக்க முடிவுசெய்துள்ளேன். எனவே, அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/-xxxxxxx (S.Elango) 11/03/2026.

Sir, Received the above computer typed complaint on 11.03.2026 at about 18.15 hrs. Sd xxxx (N.Narendran) 11.03.2026, Inspector of Police, V & AC, Salem.

Sir, Integrity and antecedents of the accused was verified through sources and found to be not good. Genuineness of the informant was also verified through sources and nothing came to adverse. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.02/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as

amended in 2018 on 12.03.2026 at 07.00 hrs. Sd xxxx (N.Narendran) 12/03/2026, Inspector of Police, V & AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble court of the Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned.

N. Narendran 12.03.2026

(N.Narendran)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Salem.